தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

# இன்றைய வேளாண் செய்திகள்

17.09.2012 P.M

18.09.2012 A.M

| 18th Sep 20012 | மானிய விலையில் இடுபொருள் வழங்கல் |
|---|---|

ராசிபுரம்: "ஆதி திராவிடர் விவசாயிகளுக்கு, ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ், மானிய விலையில் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது' என, நாமகிரிப்பேட்டை வட்டார வேளாண் உதவி இயக்குனர் லோகநாத பிரகாசம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:ராசிபுரம் அடுத்த நாமகிரிப்பேட்டை வட்டாரத்தில் உள்ள, ஆதி திராவிடர் விவசாயிகளுக்கான ஒருங்கினைந்த தானிய அபிவிருத்தி திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில், ஒருங்கினைந்த தானிய அபிவிருத்தி திட்டம் நெல் இனத்தில், 900 கிலோ நெல் விதைகள், ஐந்து ரூபாய் மானியத்தில், வினியோகம் செய்யப்பட உள்ளது.மேலும், விசை களையெடுப்பான் ஒன்று, 15 ஆயிரம் ரூபாய் மானியத்திலும், ரொாட்டவேட்டர் ஒன்று, 20 ஆயிரம் ரூபாய் மானியத்திலும், பவர் டில்லர் ஒன்று, 45 ஆயிரம் ரூபாய் மானியத்திலும் வழங்கப்பட உள்ளது. தேவைப்படும் ஆதி திராவிடர் விவசாயிகள், நாமகிரிபேட்டை வேளாண் விரிவாக்க மையத்தில் உள்ள முன்னுரிமை பதிவேட்டில், அவரவர் சிட்டா, ரேஷன் கார்டு நகலுடன் வந்து பதிவு செய்து பயன் பெறலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

| 18th Sep 20012 | மானிய விலையில் பைப் வழங்கல் வேளாண் உதவி இயக்குனர் தகவல் |
|---|---|

நாமக்கல்: "நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, அதிகபட்சமாக, 800 மீட்டர் ஐ.எஸ்.ஐ., முத்திரையிடப்பட்ட, தரமான பி.வி.சி., பைப்கள், மானிய விலையில் வழங்கப்படும்' என, நாமக்கல் வேளாண் உதவி இயக்குனர் ஜோதேடியஸ் தெரிவித்தார்.இதுகுறித்து, அவர் வெளியிட்ட அறிக்கை:நாமக்கல் வட்டாரத்தில், ஐசோபார்ம் எண்ணெய் வித்து திட்டத்தின் கீழ்,

50 சதவீதம் அல்லது ஒரு ஹெக்டேருக்கு, 15 ஆயிரம் ரூபாய் என்ற அளவில், பைப் லைன் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது. கிணற்றிலிருந்து, வாய்க்கால் மூலம் தண்ணீர் பாய்ச்சும்போது, வீணாக நீர் விரயமாவதைக் தடுத்து, அதிக பரப்பில் பயிர் சாகுபடி செய்ய, இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.இத்திட்டத்தில், ஒரு ஹெக்டேர் நிலக்கடலை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 2012-13ம் நிதியாண்டில், அதிகபட்சமாக, 800 மீட்டர் ஐ.எஸ்.ஐ., முத்திரையிடப்பட்ட, தரமான பி.வி.சி., பைப்கள், விவசாயிகள் தேவைக்கேற்ப, 2.5 அல்லது, மூன்று இன்ச் அளவுகளில், 1,500 ரூபாய் மானியத்தில் வழங்கப்படும்.இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிகள், நிலக்கடலை பயிர் சாகுபடி செய்ததற்கான அடங்கல், கம்ப்யூட்டர் சிட்டா, ரேஷன் கார்டு நகல்கள் மற்றும் ஃபோட்டோ ஆகியவற்றை, நாமக்கல் வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகி, பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

18th Sep 20012

## விதைப்பண்ணை விவசாயிக்கு தொழில் நுட்ப பயிற்சி முகாம்

நாமக்கல்: விதைச்சான்று மற்றும் அங்ககச்சான்று துறை மூலம், தரமான சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்வதற்கு, அட்மா திட்டத்தின் கீழ், விதைப்பண்ணை விவசாயிகளுக்கு, விதை உற்பத்தி குறித்து, தொழில் நுட்ப பயிற்சி முகாம், எலச்சிபாளையம் யூனியன் அலுவலக கூட்ட அரங்கில் நடந்தது.நாமக்கல் மாவட்ட வேளாண் துணை இயக்குனர் (பொறுப்பு) முரளிதரன் தலைமை வகித்து, பயிற்சியை துவக்கி வைத்து பேசும்போது,""வேளாண் உற்பத்திக்கு முக்கியமாக ஏழு இடு பொருட்கள் தேவை. அதில், தலையாயது, தரமான விதை. நல்ல தரமான விதை என்பது, சிறந்த முளைப்பு திறன் கொண்டதாகவும், சிறந்த புறத்தூய்மை உள்ளதாகவும், கலவன்கள் அற்றதாகவும், அளவான ஈரப்பதம் உடையதாகவும் இருக்கும்," என்றார்.வேளாண் பொறியியல் துறை மாவட்ட செயற்பொறியாளர் இளையப்பன், வேளாண்மையில் இயந்திரமயமாக்குதல், விதைப்பண்ணைக்கு வயல் தயாரிப்பு, மழை நீர் சேகரிப்பின் முக்கியத்துவம் குறித்துப் பேசினர். தரக்கட்டுப்பாடு வேளாண் உதவி இயக்குனர் ஜெகதீசன், விதைப்பண்ணைக்கு உயிர் உரங்கள் இடுவது பற்றியும், நடமாடும் மண் ஆய்வுக்கூட அலுவலர் தனம், மண் மற்றும் நீர் மாதிரி ஆய்வின் முக்கியத்துவம் குறித்தும் விளக்கினர்.விதைச்சான்று உதவி இயக்குனர் சுப்ரமணியம், சான்று விதையின் முக்கியத்துவம், விதைப்பண்ணை அமைக்கும் போது, விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள் மற்றும் தொழில் நுட்பங்கள் குறித்தும், அங்ககச்சான்றளிப்பு குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.அலுவலர்கள் கந்தசாமி, முருகேசன், வேளாண் அலுவலர் கோமதி, தர்மலிங்கம் ஆகியோர் பல்வேறு வழிமுறைகளை விளக்கினர். வேளாண் அலுவலர்கள், முன்னோடி விவசாயிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

18th Sep 20012

## டன்னுக்கு ரூ.3,000 வழங்க வேண்டும்

மோகனூர்: "நடப்பு, 2012-13ம் ஆண்டு அரவை பருவத்துக்கு, கரும்பு விலையாக, டன் ஒன்றுக்கு, 3,000 ரூபாய் விலை உயர்த்தி வழங்க வேண்டும்' என, கரும்பு பயிரிடுவோர் சங்க செயற்குழு கூட்டத்தில், தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.மோகனூரில், கரும்பு பயிரிடுவோர் சங்க செயற்குழு கூட்டம் நடந்தது. சங்கத் தலைவர் கருப்பண்ணன் தலைமை வகித்தார். செயலாளர் நவலடி வரவேற்றார். துணைத்தலைவர் துரைசாமி, துணைச் செயலாளர் பூபதி ஆகியோர், கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.கூட்டத்தில், சேலம் கூட்டுறவு ஆலை என்ற பெயரில், மோகனூரில் இயங்கி வரும் சர்க்கரை ஆலையை, "மோகனூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை, நாமக்கல் மாவட்டம்' என பெயர் மாற்றம் செய்து, தமிழக அரசு அறிவிக்க வேண்டும். நடப்பு, 2012-13ம் ஆண்டு அரவை பருவத்துக்கு, கரும்பு விலையாக, டன் ஒன்றுக்கு, 3,000 ரூபாய் விலை உயர்த்தி வழங்க வேண்டும்.சர்க்கரை ஆலையில் நிறுவப்பட்டு பல ஆண்டுகளாக செயல்படாமல் இருந்த எத்தனால் ஆலையில், உற்பத்தியை துவங்க, நடவடிக்கை எடுத்த தமிழக அரசுக்கும், ஆலை தனி அலுவலருக்கும் பாராட்டுகளை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆலைக்கு, அரசு வழங்கியுள்ள வழிவகை கடன் தொகை, 47 கோடி ரூபாய் அளவிலான தொகையை, அரசின் பங்காக ஆலைக்கு மாற்றம் செய்ய, தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.இவ்வாலை, நான்கு ஆண்டுகளாக லாபத்தில் இயங்கி வருகிறது. அதன் பயனாக, ஆலையின் லாபத்தில், அங்கத்தினர் பங்கிற்கான ஈவு தொகையை (டிவிடண்ட்) வழங்க வேண்டும். ஆலை மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் இணை மின் உற்பத்தி நிறுவனத்தின் கட்டுமான பணிகளை, விரைந்து முடித்து, மின் உற்பத்தி துவங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.இப்பகுதியில் அமைந்துள்ள, ராஜா, குமாரபாளையம், பொய்யேரி மற்றும் மோகனூர் வாய்க்கால்களை பராமரிப்பு மேற்கொண்டு, விவசாயத்துக்கு தடையில்லாமல் தண்ணீர் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இரண்டு அரவை பருவத்தில், விவசாயிகள் சப்ளை செய்யும் ஒரு டன் கரும்புக்கு, 25 ரூபாய் பிடித்தம் செயயப்படுகிறது.அதை, வரும், 2012-13ம் அரவை பருவத்தில், கரும்பு கிரயத்தில் பிடித்தம் செய்யக்கூடாது என கேட்டுக்கொள்ளப்படுகிறது. சர்க்கரை ஆலைக்கு புதிதாக உறுப்பினர்களை சேர்ப்பதிலும், ஆலைக்கான மேலாண் குழு தேர்தலை நியாயமாகவும், சட்டத்துக்கு உட்பட்டும், ஜனநாயக முறைப்படியும் நடத்த, ஆலை நிர்வாகமும், தமிழக அரசும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.நிர்வாகக்குழு உறுப்பினர்கள் ராஜாகண்ணன், கணேசன், வரதராஜன், ஜெகநாதன், நிர்வாகிகள், உறுப்பினர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

**18th Sep 20012** | **வரும் 25ம் தேதி விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம்**

திருவள்ளூர் : விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், வரும் 25ம் தேதி நடக்கிறது.
திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், வரும், 25ம் தேதி செவ்வாய் காலை 11 மணியளவில், கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது.
கலெக்டர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில், மாவட்டத்தில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு உள்ளிட்ட வேளாண் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர்.
இந்த வாய்ப்பினை இம்மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் பயன்படுத்தி, கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு திருவள்ளூர் கலெக்டர் ஆஷிஷ் சட்டர்ஜி கேட்டுக் கொண்டு உள்ளார்.

**18th Sep 20012** | **பூட்டி கிடக்கும் கோழி விரிவாக்க நிலையம்: அரசு திட்டம் வீண்**

திருவள்ளூர் : கால்நடைத் துறைக்கு சொந்தமான கோழி விரிவாக்க நிலையம், மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக பூட்டிக் கிடக்கிறது. கோழி பண்ணையின் கட்டடம் இருக்கும் இடம் தெரியாமல் புதர் மண்டிக் கிடக்கிறது.
கடம்பத்தூர் ஒன்றியத்தில் உள்ளது போளிவாக்கம் ஊராட்சி. இந்த ஊராட்சிக்கு உட்பட்ட திருவள்ளூர் - ஸ்ரீபெரும்புதூர் மாநில நெடுஞ்சாலையில், கால்நடைத் துறைக்கு சொந்தமான கோழி
விரிவாக்க நிலையம் உள்ளது.

தனி கட்டடம்

கடந்த, 2002-03ம் ஆண்டு வறட்சி நிவாரணப் பணி திட்டத்தின் கீழ் இங்கு, கோழி விரிவாக்க நிலையத்துடன், கோழிகளை பராமரிக்க காற்றோட்டத்துடன் கூடிய தனி கட்டடமும், தீவனப் புல் பண்ணையும் அமைக்கப்பட்டது.
துவக்கத்தில் இயங்கிய இந்த நிலையம், கடந்த மூன்று ஆண்டு
களுக்கு முன் எவ்வித அறிவிப்பும் இன்றி மூடப்பட்டு உள்ளது.
இதனால் இக்கட்டடத்தின் வெளியே, அவ்வழியாக செல்லும் சிலர், குடி மையமாக மாற்றி, போதை ஏற்றிக் கொண்டு, அங்கேயே படுத்துவிட்டு செல்கின்றனர்.

பராமரிப்பு இல்லை

பராமரிப்பு இல்லாமல் மூடிக்
கிடப்பதால், கோழிப் பண்ணையை சுற்றிலும், செடி, கொடிகள் வளர்ந்து, பண்ணை இருக்கும் இடம் தெரியாமல் மூடிக் கிடக்

கிறது. இதனால் அரசு திட்டம் வீணாகி உள்ளது.
தற்போது கிராமங்களில், வீடுகள்தோறும் நாட்டுக் கோழிகளை மக்கள் வளர்த்து வருகின்றனர். இதன் மூலம் முட்டைகளை அடை வைத்து கோழிகளின் இனப்பெருக்கத்தை அதிகரித்து வருகின்றனர். மேலும், நாட்டுக் கோழி முட்டைகளை ஒரு முட்டை, ஐந்து முதல், ஆறு ரூபாய் வரை விற்று குடும்ப செலவுகளை சரிசெய்து வருகின்றனர்.
கோழி விரிவாக்க நிலையம் உள்ள பகுதியில், காலியாக உள்ள இடத்தில், தீவனப்புல் வளர்க்கப்பட்டு வந்தது. இந்த புற்களை சிகிச்சைக்கு வரும் கால்நடைகள் சாப்பிட்டு வந்தன. அதோடு, கால்நடைகள் வைத்துள்ள விவசாயிகளுக்கு, தீவனப்புல் வளர்க்கும் முறை, புல் ரகங்கள் குறித்து செயல்முறை விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டு வந்தது. தற்போது அதுவும் கிடையாது.
நடவடிக்கை
இதுகுறித்து பெயர் வெளியிட விரும்பாத மாவட்ட கால்நடைத்துறை அதிகாரி ஒருவர் கூறும்போது, ""போளிவாக்கம் ஊராட்சியில், மூடிக்கிடக்கும் கோழி விரிவாக்க நிலையம், தீவனப் புல் பண்ணையில், உள்ள முட்புதர், ஒரு வாரத்திற்குள் அகற்றப்படும். அங்கு மீண்டும் கோழி விரிவாக்க நிலையம் இயங்க உரிய
நடவடிக்கை எடுக்கப்படும்,"
என்றார்.

18th Sep 20012

## வேளாண் பட்டப் படிப்பில் சேர விவசாயிகளுக்கு...ஆர்வமில்லை1: 40 இடங்களுக்கு 8 பேர் மட்டுமே விண்ணப்பிப்பு

திருவள்ளூர் : தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம் சார்பில், மாவட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட, பட்டப் படிப்பில் சேர, விவசாயிகள் ஆர்வம் காட்டவில்லை. இதில் 40 இடங்களுக்கு, எட்டு பேர் மட்டுமே விண்ணப்பித்து உள்ளதால், படிப்பு துவங்கப்படாமல் உள்ளது.
திருவள்ளூர் ஒன்றியம், திருவூர் கிராமத்தில், தமிழ்நாடு வேளாண் பல்லையின் கீழ் செயல்படும், நெல் ஆராய்ச்சி நிலையம் மற்றும் வேளாண் அறிவியல் நிலையம் உள்ளன. நெல் ஆராய்ச்சி நிலையம், 1942ம் ஆண்டு முதலும், வேளாண் அறிவியல் நிலையம், 2000ம் ஆண்டில் இருந்தும் செயல்பட்டு வருகிறன.
தொலைதூர கல்வி
இந்த நிலையத்தின் மூலம், மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு அவ்வப்போது வேளாண் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வரப்படுகிறது. புதிய நெல் ரகங்கள் தொடர்பான ஆரா#ச்சியும் @மற்கொள்ளப் படுகிறது. இதில், ஒன்றான "டி.கே.எம்.9 ' என்ற நெல் ரகத்துக்கு, பிலிப்பைன்ஸ் நாட்டில் நினைவு ஸ்தூபி வைக்கப் பட்டு உள்ளது.

இங்கு, தமிழ்நாடு @வளாண் பல்கலையின் திறந்தவெளி மற்றும் தொலைதூர கல்வி இயக்கம், வழங்கும் இளநிலை பட்டப் படிப்பு, இந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் அறிமுகப் படுத்தப் பட இருந்தது.

இந்த திட்டம், கோயம்புத்தூர், திண்டிவனம், திருநெல்வேலி, நாகர்கோவில், சேலம் மற்றும் திருச்சி ஆகிய ஆறு இடங்களில், இதற்கு முன்பு, öŒயல்படுத்தப் பட்டு உள்ளது.

பயிற்சியுடன் படிப்பு

இந்த திட்டத்தின் மூலம், @வளாண் தொழிலில் ஈடுபட்டுள்@ளார், தொழிலை கவனித்துக்கொண்@ட படிக்க வா#ப்பு கிடைக்கிறது. பாட திட்டத்தில் உழவர்களுக்கு, öŒ#முறையுடன், நிலத்தினை பண்படுத்துதல் முதல் பயிர் அறுவடை வரையும், தானியங்களை சேமித்தல், பதப்படுத்துதல் மற்றும் மதிப்பூட்டுதல் வரை, அனைத்து நவீன வேளாண் தொழில்நுட்பங்களையும் அறிந்து கொள்ளும் வகையில், இப்புதிய தொழில்நுட்ப படிப்பு அமைந்து உள்ளது.

8 பேர் மட்டுமே...

இந்த திட்டம், கடந்த ஜூன் மாதம் முதல், திருவூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தில் துவங்க திட்டமிடப் பட்டு இருந்தது. ஆனால், இப்படிப்பில் சேர விவசாயிகள், எட்டு பேர் மட்டுமே விண்ணப்பித்தனர். போதிய மாணவர்கள் இல்லாததால், வகுப்புகள் துவங்கப் படவில்லை.

இது குறித்து, திருவூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தின், தலைவர், மாணிக்கத்திடம் கேட்டபோது, ""குறைந்த பட்சம், 40 பேர் சேர்ந்தால் மட்டுமே பயிற்சி மையம் துவங்க முடியும். நம்முடைய மாவட்டத்தைப் பொறுத்தவரை, விவசாயிகள், எட்டு பேர் மட்டுமே விண்ணப்பித்தனர்," என்றார்.

@மலும், ""இதனால், அவர்களை திண்டிவனத்தில் உள்ள பயிற்சி மையத்துக்கு அனுப்பி விட்டோம். கூடுதலாக விவசாயிகள் சேரும்பட்சத்தில், இந்த புதிய படிப்பு துவங்கப்படும். இது குறித்து, விவசாயிகள், மத்தியில் போதிய அளவு விளம்பரப் படுத்தப் பட்டு உள்ளது. மேலும் விவரங்களுக்கு 2762 0233 மற்றும் 2762 0283 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்," என்றார்.

அரசு மானியம்

இப்படிப்பில் சேர, விவசாயிகள், 10ம் வகுப்பு படித்திருந்தாலே போதுமானது. பயிற்சிக் காலம் மூன்று ஆண்டுகள். 27 வயது நிரம்பியிருத்தல் வேண்டும். பயிற்சிக் கட்டணம் 45 ஆயிரம் ரூபாய். இதில், 50 சதவீதத்தை அரசு மானியமாக வழங்குகிறது.

| 18th Sep 20012 | **சங்கராபுரம் பகுதி கிராமங்களில்விவசாய பணி துவக்காமல் சுணக்கம்** |
|---|---|

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதி கிராமங்களில் நிலங்களுக்கு கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயம் செய்வதில் விவசாயிகள் சுணக்கம் காட்டி வருகின்றனர்.சங்கராபுரம் பகுதியில் சேமபாளையம், சோழம்பட்டு கூட்ரோடு, மூரார்பாளையம், அழகாபுரம், பூட்டை, அரசம்பட்டு, பாண்டலம், ஆகிய ஊர்கள் நெடுஞ்சாலையை ஒட்டி உள்ளது. இப்பகுதியில் ரியல் எஸ்டேட் செய்வதற்காக கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களை விற்பனை செய்து வருகின்றனர்.ஆள் பற்றாக்குறை, தண்ணீர் மற்றும் மின் தட்டுப்பாடு போன்ற காரணத்தினால் நல்ல விலை கிடைக்கும் போதே விற்றுவிடலாம் என்ற எண்ணத்தில் விவசாயிகள் தங்கள் நிலங்களை விற்று வருகின்றனர். சேலம், சென்னை,திருச்சி மற்றும் வெளியூர்களில் இருந்து வந்து ரியல் எஸ்டேட் உரிமையாளர்கள் அதிக விலை கொடுத்து வாங்கி வருகின்றனர்.விவசாயிகளுக்கு தங்கள் நிலங்களை விற்கும் எண்ணம் வந்துவிட்டதால் பெரும்பாலான விவசாயிகள் தங்கள் நிலத்தை சுற்றி வேலி போட்டு கரம்பாகவே வைத்துள்ளனர். இதனால் மானாவாரி பயிர்களான கம்பு, மணிலா, எள், காராமணி, உளுந்து, வரகு போன்ற பயிர்கள் கூட சாகுபடி செய்யவில்லை. இந்த நிலை தொடர்ந்தால் வரும் ஆண்டில் இப்பகுதியில் விவசாயம் முற்றிலும் குறைந்துவிடும். சங்கராபுரம் பகுதியில் விளை நிலங்கள் பிளாட்டுகளாக மாறிவருவதை தடுக்க அதிகாரிகள் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| 18th Sep 20012 | **சங்கராபுரம் பகுதி கிராமங்களில்விவசாய பணி துவக்காமல் சுணக்கம்** |
|---|---|

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதி கிராமங்களில் நிலங்களுக்கு கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயம் செய்வதில் விவசாயிகள் சுணக்கம் காட்டி வருகின்றனர்.சங்கராபுரம் பகுதியில் சேமபாளையம், சோழம்பட்டு கூட்ரோடு, மூரார்பாளையம், அழகாபுரம், பூட்டை, அரசம்பட்டு, பாண்டலம், ஆகிய ஊர்கள் நெடுஞ்சாலையை ஒட்டி உள்ளது. இப்பகுதியில் ரியல் எஸ்டேட் செய்வதற்காக கூடுதல் விலை கிடைப்பதால் விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களை விற்பனை செய்து வருகின்றனர்.ஆள் பற்றாக்குறை, தண்ணீர் மற்றும் மின் தட்டுப்பாடு போன்ற காரணத்தினால் நல்ல விலை கிடைக்கும் போதே விற்றுவிடலாம் என்ற எண்ணத்தில் விவசாயிகள் தங்கள் நிலங்களை விற்று வருகின்றனர். சேலம், சென்னை,திருச்சி மற்றும் வெளியூர்களில் இருந்து வந்து ரியல் எஸ்டேட் உரிமையாளர்கள் அதிக விலை கொடுத்து வாங்கி வருகின்றனர்.விவசாயிகளுக்கு தங்கள் நிலங்களை விற்கும் எண்ணம் வந்துவிட்டதால் பெரும்பாலான விவசாயிகள் தங்கள் நிலத்தை சுற்றி வேலி போட்டு கரம்பாகவே வைத்துள்ளனர். இதனால் மானாவாரி பயிர்களான கம்பு, மணிலா, எள், காராமணி, உளுந்து, வரகு போன்ற பயிர்கள் கூட சாகுபடி செய்யவில்லை. இந்த நிலை தொடர்ந்தால் வரும் ஆண்டில் இப்பகுதியில்

விவசாயம் முற்றிலும் குறைந்துவிடும். சங்கராபுரம் பகுதியில் விளை நிலங்கள் பிளாட்டுகளாக மாறிவருவதை தடுக்க அதிகாரிகள் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

17th sep 2012 P.M

| 17th Sep 20012 | செறிவூட்டடப்பட்ட தொழு உரம் தயாரிக்க அரசு மானியம் |
|---|---|

நாமக்கல்: "செறிவூட்டடப்பட்ட தொழு உரம் தயாரிக்க, விவசாயிகளுக்கு, அரசின் மானியம் வழங்கப்படும்' என, கபிலர்மலை வட்டார வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில், மண் வளத்தை காக்கும் வகையில், எருக்குழி அமைத்து, செறியூட்டப்பட்ட தொழு உரம் தயாரிக்க, அரசு மானியம் வழங்கிறது. தொடர்ந்து, பயிர் சாகுபடி செய்யும்போது, மண் வளம் குறைந்து, பயிர் மகசூல் குறைகிறது. அதை தவிர்க்க, தொழு உரம் வயலில் அடியுரமாக இடுதல் அவசியமாகிறது. தொழு உரம் என்பது, கால்நடை கழிவுகள், பண்ணைக் கழிவுகள் ஆகியவற்றை குழியில் இட்டு மக்கவைத்து கிடைப்பது.தொழு உரத்துடன், ரசாயன உரத்தினை கலந்து, செறிவூட்டி, அதை பயிருக்கு இடும்போது, பயிர் செழித்து வளருவதுடன், நல்ல மகசூலும் கிடைக்கும். எருக்குழி அமைத்து, செறிவூட்டிய தொழு உரம் தயாரிக்க, நடப்பு ஆண்டில், பத்து விவசாயிகளுக்கு மானியம் வழங்க, கபிலர்மலை வட்டாரத்துக்கு ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது.தொழு உரம் தயாரிக்க, 15 அடி நீளம், ஆறு அடி அகலம், இரண்டு அடி ஆழம் கொண்ட குழி அமைத்து அதில் பண்ணை கழிவுகள், கால்நடை கழிவுகள், 1,500 கிலோவுடன், சூப்பர் பாஸ்பேட், 150 கிலோ, யூரியா, 100 கிலோ, சூடோமோனாஸ் இரண்டு கிலோ, உயிர் உரங்கள் பத்து பாக்கெட் இட்டு, நன்கு கலந்து, குழியினை நிரப்பி, காற்று உட்செல்லா வண்ணம், ஈரமண் கொண்டு நன்கு பூசி, 45 நாட்களுக்கு மூட்டமிட வேண்டும்.அதில் இருந்து, 750 கிலோ செறிவூட்டிய தொழு உரம் கிடைக்கும். அதனால், மண்வளம் பெருகி, மண் வளம் காக்கப்பட்டு, மகசூலும் கூடும். இம்மாதிரியான குழி அமைக்க, 4,472 ரூபாய் மட்டுமே செலவாகும். அதில், 50 சதவீதம் மானியமாக, 2,236 ரூபாய், அரசு மூலம் விவசாயிக்கு வழங்கப்படும்.இம்மாதிரியான எருக்குழி அமைத்து, செறிவூட்டப்பட்ட தொழு உரம் தயாரிக்க ஆர்வமுள்ள விவசாயிகள், கபிலர்மலை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில், தங்களது விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ள வேண்டும். முன்னுரிமைப்படி மானியம் வழங்கப்படும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

| 17th Sep 20012 | வனப்பரப்பை அதிகரிக்க, 2 லட்சம் மரக்கன்று பொதுமக்களுக்கு இலவசமாக வழங்க தயார் |
|---|---|

கோபிசெட்டிபாளையம்: கோபி மூங்கில் கோட்டத்தில் பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு மற்றும் பசுமையாக்க திட்டத்தின் கீழ், இரண்டு லட்சத்து 10 ஆயிரம் இலவச மரக்கன்றுகள் வழங்க, 21 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.தமிழகத்தில் காடுகளின் பரப்பளவு, 22 சதவீதமாக உள்ளதை, 33 சதவீதமாக உயர்த்தும் வகையில் பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு மற்றும் பசுமையாக்க திட்டத்தின் கீழ், பொது மக்களுக்கு இலவசமாக மரக்கன்று வழங்க, அரசு உத்தரவிட்டுள்ளது. சென்ற, 2011-12ல் உருவாக்கப்பட்ட இத்திட்டம், 2018 வரை செயல்படுத்தப்பட உள்ளது.கோபி மூங்கில் கோட்டம் சார்பில், பொது மக்களுக்கு இலவசமாக மரக்கன்றுகளை வழங்க, தாளவாடி, தலமலை, கடம்பூர்-1, கடம்பூர்-2, பங்களாபுதூர் ஆகிய ஐந்து சரகங்களில், 21 ஒருங்கிணைந்த கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.கோபி மூங்கில் கோட்ட வன அலுவலர் ரமணன் கூறியதாவது:பல்லுயிர் பெருக்க பாதுகாப்பு மற்றும் பசுமையாக்க திட்டத்தின் கீழ், பங்களாபுதூர் வனச்சரகத்தில் பொலகாளிபாளையம், பா.வெள்ளாளபாளையம், நாகதேவம்பாளையம், குள்ளம்பாளையம் ஆகிய வருவாய் கிராமங்கள், கடம்பூர்-1 வனச்சரகத்தில் அளுக்குளி, மொடச்சூர்.கலிங்கியம், கோட்டுபுள்ளாம்பாளையம், கடம்பூர்-2 வனச்சரகத்தில் மொட்டணம், எம்மாம்பூண்டி, ஒழலக்கோவில், நம்பியூர், பொலவபாளையம், தாளவாடி வனச்சரகத்தில் குரும்மப்பாளையம், வாதம்பாளையம், கச்சபெருமாபாளையம், பனையம்பாளையம், தலமலை வனச்சரகத்தில் இக்கரை தட்டப்பள்ளி, பகுதாம்பாளையம், பூசாரிபாளையம், புங்கார் ஆகிய வருவாய் கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.ஒவ்வொரு சரகத்திலும் ஒரு ஒருங்கிணைந்த கிராமம் தேர்வு செய்யப்பட்டு, மரக்கன்றுகள் வளர்க்கப்படுகின்றன. நாட்டு வேம்பு, மலை வேம்பு, பூவரசு, ஈட்டி, சவுக்கு, தேக்கு, மூங்கில், சில்வரூக் உள்ளிட்ட மரங்கன்றுகள் வளர்க்ப்படுகின்றன. குறுகிய நாட்களில் வளரும் சவுக்கு, மலைவேம்பு, தேக்கு உள்ளிட்ட மரக்கன்றுகள், 30 சதவீதமும், நீண்ட நாட்கள் வளரும் மரக்கன்றுகள், 70 சதவீதமும் வளர்க்கப்படுகிறது.ஐந்து ஹெக்டருக்கு குறைவாக நிலம் உள்ள விவசாயிகளுக்கு மற்றும் பொது மக்களுக்கு இவை இலவசமாக வழங்கப்படும்.மரக்கன்றுகளை முறையாக பராமரித்து வளர்க்கும் விவசாயிகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அரசின் சார்பில், ஊக்கத்தொகை வழங்கப்படும். மரக்கன்றுகள் மரங்களாக வளர்ந்த பிறகு, அதை விவசாயிகளே வெட்டி, தனியாருக்கு விற்கலாம்.திட்டத்துக்காக கோபிசெட்டிபாளையம் மூங்கில் கோட்டத்தில் மொத்தம், இரண்டு லட்சத்து, 10 ஆயிரம் மரக்கன்றுகள் வளர்க்கப்படுகின்றன. இலவசமாக மரக்கன்றுகளை பெற விரும்பும் விவசாயிகள், உரிய ஆவணத்துடன் வனச்சரகத்தை அணுகி முன்பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அவர் கூறினார்.

**17th Sep 20012** | ***கீழ்பவானி வாய்க்காலில் உயிர் தண்ணீர் திறப்பு***

சத்தியமங்கலம்: கீழ்பவானி வாய்க்காலில் சிறப்பு நனைப்பாக வினாடிக்கு, 500 கன அடி உயிர் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.கீழ்பவானி வாய்க்கால் மூலம், ஈரோடு, திருப்பூர், கரூர் மாவட்டங்களில், 2.07 லட்சம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. வழக்கமாக, ஆகஸ்ட் 15ம் தேதி திறக்கப்படும் தண்ணீர், நடப்பாண்டு பவானிசாகர் அணையில் தண்ணீர் இல்லாததால் திறக்கப்படவில்லை. வாய்க்காலின் இருபக்க கரைப்பகுதியில் உள்ள விவசாயக் கிணறுகளிலும் நீர்மட்டம் சரிந்தது.பாசனப் பகுதியில் கிணற்று தண்ணீரை வைத்து சாகுபடி செய்யப்பட்ட பல்வேறு பயிர்களும், கரையோர தென்னை மரங்களும் கருகும் நிலை ஏற்பட்டது. இவற்றை காப்பாற்றவும், இப்பகுதியில் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் நோக்கிலும், 15 நாட்களுக்கு, கீழ்பவானி வாய்க்காலில் சிறப்பு நனைப்பு திட்டப்படி உயிர் தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டது.நேற்று மாலை, 6 மணிக்கு வினாடிக்கு, 500 கன அடி தண்ணீர் கீழ்பவானி வாய்க்காலில் திறந்துவிடப்பட்டது. இது படிப்படியாக அதிகரித்து வினாடிக்கு, 2,000 கனஅடி வரை திறக்கப்படும் என, பொதுப்பணித் துறையினர் தெரிவித்தனர்.

17th Sep 20012

## குன்னூர் தேயிலை ஏலத்தில் முன்னேற்றமில்லை

குன்னூர் : குன்னூர் தேயிலை ஏலத்தில் உள்நாடு மற்றும வெளிநாடு வர்த்தகர்கள் ஆர்வத்துடன் பங்கேற்ற போதும், விலையில் முன்னேற்றம் காணப்படவில்லை.
குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்கத்தின் 37வது ஏலம் கடந்த 13 மற்றும் 14ம் தேதிகளில் நடந்தது. இதில் மொத்தம் 11.78 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது.
இதில் இலை ரகம் 8.47லட்சம் கிலோவும், டஸ்ட் ரகம் 3.31 லட்சம் கிலோவும் அடங்கும்.
உள்நாடு மற்றும வெளிநாடு வர்த்தகர்கள் ஆர்வத்துடன் பங்கேற்ற போதும், விலையில் முன்னேற்றம் காணப்படவில்லை. ஏலத்தில் 87 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.
சாதாரண இலை ரகத்துக்கு 72-74 ரூபாய் வரையிலும், உயர் வகைக்கு 100-130 ரூபாய் வரையிலும், டஸ்ட் ரகத்தில் உயர் ரகத்துக்கு 81-83 ரூபாய் வரையிலும், உயர் வகைக்கு 100-140 ரூபாய் வரையிலும் விலை கிடைத்தது. அதிகபட்சமாக சிடிசி டஸ்ட் ரக ஒரு கிலோ தேயிலை தூளுக்கு 157 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு 200 ரூபாயும் விலை கிடைத்தது. வரும் 20 மற்றும் 21ம் தேதி நடக்கும் 38வது ஏலத்துக்கு 12.48 லட்சம் கிலோ விற்பனைக்கு தயாராக உள்ளது.

17th Sep 20012

## வட்டியில்லா பயிர் கடனுக்கு சிறப்பு முகாம்: 236 பேர் மனு

பெரம்பலூர்: வட்டியில்லா பயிர் கடனுக்காக நடந்த சிறப்பு முகாமில், 236 பேர் விண்ணப்பித்தனர்.

பெரம்பலூர் கலெக்டர் அலுவலகத்தில் வட்டியில்லா பயிர் கடன் வழங்கும் சிறப்பு முகாம் நடந்தது. முகாமை கலெக்டர் தரேஷ்அஹமது துவக்கி வைத்து பேசியதாவது:பெரம்பலூர் யூனியன் விவசாயிகள், சம்மந்தப்பட்ட கூட்டுறவு சங்க அலுவலர்களை அணுகி பருத்தி, மக்காச்சோளம், நெல், மரவள்ளி கிழங்கு, மஞ்சள், கடலை, கரும்பு ஆகிய பயிர்கள் சாகுபடி செய்ய, 236 விண்ணப்பங்கள் அளித்தனர். விவசாயிகள் அளித்த விண்ணப்பங்கள் கம்ப்யூட்டர் மூலம் பதிவு செய்யப்பட்டு, விண்ணப்பங்கள் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை சான்று அளிக்கப்பட்டது.

முகாமில் வருவாய் துறையினர் மூலம் பயிர்கடன் பெற தேவையான சிட்டா, சொத்து பொறுப்பு பட்டியல், கிராம கணக்கு நகல் போன்ற ஆவணங்கள் முகாம் நடந்த இடத்திலேயே வழங்கப்பட்டது.இவ்வாறு பேசினார்.முகாமில் ஆர்.டி.ஓ., ரேவதி, ஜே.ஆர்., உமாமகேஸ்வரி, டி.ஆர்., ஆத்மநாதன் உட்பட பலர் பங்கேற்றனர்.

17th Sep 20012

## தக்காளி விலை வீழ்ச்சி விவசாயிகள் பாதிப்பு

திண்டுக்கல்:மழை இல்லாததால் தக்காளி வரத்து அதிகரித்துள்ளது. விலை வீழ்ச்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.திண்டுக்கல் காந்தி மார்க்கெட்டில் கத்திரிக்காயை தவிர மற்ற அனைத்து காய்கறிகளின் விலையும் குறைந்துள்ளது. மழை இல்லாததால் தக்காளி வரத்து அதிகரித்துள்ளது. கிலோ ரூ.3 க்கு விற்கப்படுகிறது. கத்திரிக்காய் கிலோ ரூ.20 க்கு விற்கப்படுகிறது. புடலங்காய், வெண்டைக்காய் கிலோ ரூ.5 க்கும், பீட்ரூட் கிலோ ரூ.2 க்கும் விற்கப்படுகிறது. பாகற்காய், முருங்கைக்காய் கிலோ ரூ.10 க்கு விற்கப்படுகிறது.காந்தி மார்க்கெட் தக்காளி வியாபாரி சந்தோஷ் கூறுகையில்,""15 கிலோ கொள்ளளவு கொண்ட தக்காளி பெட்டி ரூ.30 க்கு விற்கப்படுகிறது. மழை இருந்தால் தக்காளி வரத்து குறைந்து விடும். நீண்டநாள் தாக்குப்பிடிக்காது என்பதால் எப்படியாவது விற்றுவிடவேண்டுமென்று வியாபாரிகள் நினைப்பார்கள். வாங்க ஆளில்லாததால் தக்காளி வீணாகி வெளியே கொட்டப்படுகிறது" என்றார்.

17th Sep 20012

## மழையின்றி கருகும் மானாவாரி பயிர்கள்

கூடலூர்:மழையின்றி லோயர்கேம்ப் பகுதியில் உள்ள, மானாவாரி பயிர்கள் கருகும் நிலையை அடைந்துள்ளன.இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை, ஒட்டு மொத்தமாக பொய்த்துவிட்ட நிலையில், அவ்வப்போது லேசான சாரல் மழை மட்டும் பெய்து வந்தது. இந்த சாரல் மழையைப் பயன்படுத்தி, லோயர்கேம்ப் பகுதியில் மானாவாரி பயிர்களான மொச்சை, துவரை, சோளம் பயிரிடப்பட்டன. கடந்த சில தினங்களாக, மழை முற்றிலும் குறைந்து, கடுமையான வெயில்

அடிக்கத் துவங்கியுள்ளது. இதனால், மானாவாரி பயிர்கள் அனைத்தும் கருகும் நிலையை அடைந்துள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

17th Sep 20012 **விவசாய சங்க மாநாடு**

திருவாடானை:திருவாடானையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க, மாவட்ட மாநாடு நடந்தது. பொதுக்கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் முருகேசன் தலைமை வகித்தார். மாநில பொதுசெயலாளர் சண்முகம், எம்.எல்.ஏ, அண்ணாத்துரை மற்றும் பலர் பங்கேற்றனர். கருப்பையா கொடியேற்றினார். சந்தானம் வரவேற்றார். மாநில துணை தலைவர் செல்வராஜ், மாவட்ட செயலாளர் முத்துராமு பங்கேற்றனர். மழை காலங்களில் வீணாக கடலில் கலக்கும் தண்ணீரை தேக்க, கண்மாய்,கால்வாய்களை சீரமைக்க வேண்டும் என்பது உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

17th Sep 20012 **கடையநல்லூர் வட்டாரத்தில் விதை நேர்த்தி செயல்விளக்க முகாம்**

கடையநல்லூர்: கடையநல்லூர் வட்டாரத்தில் வேளாண்துறை சார்பில் மண்மாதிரி மற்றும் விதை நேர்த்தி செயல்விளக்க முகாம் நடந்தது.
கடையநல்லூர் வட்டாரம் புன்னையாபுரம் கிராமத்தில் அட்மா திட்டத்தின் கீழ் விதை நேர்த்தி மற்றும் மண்மாதிரி செயல்விளக்க முகாம் நடந்தது. வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் தலைமை வகித்தார். முன்னோடி விவசாயி ராமர் முன்னிலை வகித்தார். இதில் ரைசோபியம் மூலம் விதை நேர்த்தி செய்வது குறித்தும், மண் மாதிரி எடுப்பது பற்றியும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சங்கரநாராயணன் செயல்விளக்கம் அளித்தார்.
* அட்மா திட்டத்தின் கீழ் கம்பனேரி கிராமத்தில் ஒன்றியக்குழு தலைவர் பெரியதுரை முன்னிலையில் நடந்த முகாமில் வேளாண்மை உதவி இயக்குநர் மண்மாதிரி எடுப்பது பற்றியும், உளுந்து விதைகளை சைரோபியம் கொண்டு விதைநேர்த்தி செய்வது குறித்தும் சிறப்புரையாற்றினார். தொடர்ந்து உதவி வேளாண்மை அலுவலர் நாராயணன் பேசினார். சங்கரநாராயணன் செயல்விளக்கம் அளித்தார். செல்வராஜ் நன்றி கூறினார்.
* கடையநல்லூர் வட்டாரம் கொடிக்குறிச்சி கிராமத்தில் பஞ்., தலைவர் முத்தையா முன்னிலையில் கடையநல்லூர் வேளாண்மை உதவி இயக்குநர் பெருமாள் மண்மாதிரி மற்றும் விதை நேர்த்தி செயல்விளக்கம் குறித்து பேசினார். இதில் 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.
* நயினாரகரம் கிராமத்தில் நடந்த மண்மாதிரி மற்றும் விதை நேர்த்தி செயல்விளக்க முகாம் அட்மா தலைவர் வசந்தம் முத்துப்பாண்டி முன்னிலையில் கடையநல்லூர் வேளாண்மை உதவி

இயக்குநர் பெருமாள் தலைமையில் நடந்தது. முகாமில் உளுந்து விதைகள் சைரோபியம் மூலம் விதை நேர்த்தி செய்வது குறித்து விளக்கப்பட்டது. ஏற்பாடுகளை தொழில்நுட்ப வல்லுநர்கள் டாங்கை மற்றும் கணேசன் செய்திருந்தனர். உதவி வேளாண்மை அலுவலர் ராமநாராயணன் நன்றி கூறினார்.

17th Sep 20012

## வரும் 20ம் தேதி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

தூத்துக்குடி: தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 20ம் தேதி நடக்கிறது. இதில் விவசாய சங்க தலைவர்கள், நிர்வாகிகள் திரளாக பங்கேற்குமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.இது குறித்து கலெக்டர் ஆஷீஷ்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;ஒவ்வொரு மாதமும் நடக்கும் தூத்துக்குடி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இத மாதம் வரும் 20ம் தேதி வியாழக்கிழமை காலை 11 மணிக்கு கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் ஆஷீஷ்குமார் தலைமையில் நடக்கிறது. இந்த கூட்டத்தில் விவசாய சங்க தலைவர்கள், பாசன சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும்.இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள் ளது.

17th Sep 20012

## நாட்டின் வெங்காயம் ஏற்றுமதி 23 சதவீதம் அதிகரிப்பு



மகாராஷ்டிரா:சென்ற ஏப்ரல் முதல் ஆகஸ்ட் வரையிலான ஐந்து மாத காலத்தில், நாட்டின், வெங்காயம் ஏற்றுமதி, அளவின் அடிப்படையில், 7.90 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது. மதிப்பு:இது, முந்தைய ஆண்டின், இதே காலத்தில்,மேற்கொள்ளப்பட்ட ஏற்றுமதியை (6.41 லட்சம் டன்) விட, 23 சதவீதம் அதிகம்.அதேசமயம், இதே காலத்தில், வெங்காயம் ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில், 27 சதவீதம் வீழ்ச்சி கண்டு, 776 கோடியில்இருந்து, 548 கோடி ரூபாயாக குறைந்துள்ளது.விலை குறைவு:கடந்த நிதியாண்டின், முதல் ஐந்து மாத காலத்துடன்

ஒப்பிடும்போது, நடப்பு நிதியாண்டின் இதே காலத்தில், வெங்காயத்தின் விலை, 49.71 சதவீதம் குறைந்துள்ளது.
கடந்த ஆண்டு, ஒரு டன் வெங்காயத்தின் சராசரி விலை, 13,790 ரூபாய் என்ற அளவில் இருந்தது. இது, நடப்பு நிதியாண்டில், இதுவரையிலுமாக, 6,934 ரூபாய் என்ற அளவில் உள்ளது.மத்திய அரசு, சென்ற ஏப்ரல் மாதம், வெங்காயத்திற்கான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை, டன்னுக்கு, 125 டாலராக நிர்ணயம் செய்தது. இது, சென்ற ஆண்டு, 200-250 டாலர் என்ற அளவில் இருந்தது.குறைந்தபட்ச ஏற்றுமதி விலை குறைப்பு காரணமாக, வெங்காயம் ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில் குறைந்துள்ளது.
பருவ மழை:நடப்பு நிதியாண்டின், முதல் ஐந்து மாத காலத்தில், வெங்காயம் ஏற்றுமதி, மாதம் ஒன்றுக்கு, சராசரியாக, 1.50 லட்சம் டன்னுக்கும் அதிகமாக இருந்தது.
பொதுவாக பருவ மழை காலத்தில், வெங்காய ஏற்றுமதி குறையும். மேலும், தரம் குறைவாக இருக்கும் என்பதாலும், அதை வியாபாரிகள் அதிகம் கொள்முதல் செய்யமாட்டார்கள். இதனால், சென்ற ஆகஸ்ட் மாதத்தில், வெங்காயம் ஏற்றுமதி, 1.39 லட்சம் டன்னாக குறைந்துள்ளது.சென்ற 2011-12ம் ஆண்டில், நாட்டின் வெங்காயம் உற்பத்தி, சாதனை அளவாக, 1.53 கோடி டன்னாக அதிகரித்திருந்தது. இது, முந்தைய ஆண்டில், 1.51 கோடி டன்னாக இருந்தது. மதிப்பீட்டு காலத்தில், மகாராஷ்டிரா மாநிலத்தின் பங்களிப்பு, 49 லட்சம் டன்னிலிருந்து, 50.30 லட்சம் டன்னாக உயர்ந்திருந்தது என்பது குறிப் பிடத்தக்கது.

17th Sep 20012

## காய்கறி விலை கிலோவுக்கு ரூ.5 உயரும்



கோயம்பேடு : "டீசல் விலை உயர்வை அடுத்து, கோயம்பேடு சந்தையில் காய்கறி விலை, கிலோ ஒன்றுக்கு இரண்டு ரூபாய் வரை உயரும்' என, வியாபாரிகள் கூறினர். கோயம்பேடு சந்தைக்கு வரும் காய்கறிகளில், கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களில் இருந்து 70 சதவீதம், மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து 10 சதவீதம், தமிழகத்தின் மற்ற பகுதிகளில் இருந்து 20 சதவீதம், என்ற

கணக்கில் வருகிறது. தற்போது, கர்நாடகாவில் இருந்து லாரிகளில் கொண்டு வரப்படும் காய்கறிகளுக்கு, ஒரு டன்னுக்கு 1,800 ரூபாய் வாடகையாக உள்ளது. இது குறித்து, கோயம்பேடு சந்தை, காய்கறி மொத்த வியாபாரி, சவுந்தரராஜன் கூறுகையில், ""10 சதவீதம் வாடகை உயரும் பட்சத்தில், காய்கறி விலை கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் முதல் இரண்டு ரூபாய் வரை அதிகரிக்கும்," என்றார். கோயம்பேடு சந்தையில் இருந்து காய்கறிகளை பெறும் சில்லரை வியாபார கடைகளில், விலை, கிலோவுக்கு ஐந்து ரூபாய் வரை உயரும் என, சில்லரை வியாபாரிகள் தெரிவித்தனர்

இன்றைய வேளாண் செய்திகள்

17.09.2012 P.M

18.09.2012 A.M

18th Sep 20012 | சாகுபடிக்காக மேட்டூர் அணை திறப்பு



மேட்டூர் அணையின் வலதுகரையில் திங்கள்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், மின் விசையை இயக்கி காவிரி டெல்டா பாசனத்துக்காக தண்ணீரைத் திறந்துவிடும் பொதுப் பணித

மேட்டூர், செப். 17: சம்பா நெல் சாகுபடிக்காக மேட்டூர் அணையிலிருந்து திங்கள்கிழமை தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

மேட்டூர் அணை பாசனம் மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு, திருச்சி, கரூர், பெரம்பலூர், தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களில் 16.05 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

ஆண்டுதோறும் ஜூன் 12-ம் தேதி முதல் ஜனவரி 28-ம் தேதி வரை பாசனத்துக்கு அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படும். குறுவை, சம்பா, தாளடிப் பயிர்களுக்கு சுமார் 330 டி.எம்.சி தண்ணீர் பாசனத்துக்குத் தேவைப்படும். காவிரி டெல்டா மாவட்டங்களில் பெய்யும் மழையைப் பொருத்து, பாசனத் தேவை குறையும். அணையின் நீர்மட்டம் 90 அடியாக இருந்தால் பருவ மழையை எதிர்நோக்கி, பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்படுவது வழக்கம்.

நிகழ் நீர்ப் பாசன ஆண்டில் மேட்டூர் அணையின் நீர் இருப்பு திருப்திகரமாக இல்லாததாலும், பருவ மழை கைகொடுக்காததாலும் மேட்டூர் அணையிலிருந்து குறுவை நெல் சாகுபடிக்கு ஜூன் 12-ல் தண்ணீர் திறக்கப்படவில்லை. தற்போது மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளதாலும், விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்கவும் தமிழக முதல்வரின் உத்தரவின் பேரில், திங்கள்கிழமை பிற்பகல் 12.20 மணியளவில் சம்பா நெல் சாகுபடிக்காக அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. மேட்டூர் அணையின் வலதுகரையில் உள்ள மேல்மட்ட மதகுகளை மாநில பொதுப் பணித் துறை அமைச்சர் கே.வி.ராமலிங்கம் மின் விசை மூலம் இயக்கி தண்ணீரைத் திறந்துவிட்டார்.

தொடக்கத்தில் வினாடிக்கு 4 ஆயிரம் கன அடியாகத் திறந்துவிடப்பட்ட தண்ணீர் பின்னர் படிப்படியாக அதிகரித்து வினாடிக்கு 16 ஆயிரம் கன அடியாக வெளியேற்றப்படுகிறது. பாசனத்துக்குத் தண்ணீர் திறக்கப்பட்டதன் மூலம் நீர் மின் நிலையங்கள் வழியாக மின் உற்பத்தியும் தொடங்கியது. அணை மின் நிலையம், சுரங்க மின் நிலையம் மற்றும் ஐந்து கதவணைகள் மூலம் திறக்கப்படும் நீரின் அளவைப் பொருத்து 400 மெகாவாட் மின்சாரம் வரை உற்பத்தி செய்யப்படும்.

நிகழ்ச்சியில் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி, தொழில் துறை அமைச்சர் பி.தங்கமணி, சேலம் மாவட்ட ஆட்சியர் க.மகரபூஷணம், பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்பின் திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் கணேச மாரச்சன், கண்காணிப்புப் பொறியாளர் சிவானந்தம், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.செம்மலை, சட்டப் பேரவை உறுப்பினர்கள் பல்பாக்கி கிருஷ்ணன், விஜயலட்சுமி பழனிசாமி, சேலம் மாநகராட்சி மேயர் சவுண்டப்பன், மேட்டூர் நகர்மன்றத் தலைவர் லலிதா சரவணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

17th sep 2012 P.M

| 17th Sep 20012 | பருத்தி, மக்காச்சோளம் கூடுதல் மகசூல் பெற ஆலோசனை |
|---|---|

பெரம்பலூர், செப். 16: பருத்தி மற்றும் மக்காசோள சாகுபடியில் கூடுதல் மகசூல் பெற புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த வேளாண் இணை இயக்குநர் பி. சங்கரலிங்கம் செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில், 45,000 ஹெக்டரில் மக்காசோளமும், 26,000 ஹெக்டரில் பருத்தியும் சாகுபடி செய்து வருகின்றனர். ஆனால், மாநில சராசரி விளைச்சலை விட குறைவான மகசூல் பெறுகின்றனர். எனவே, ஒரு ஏக்கர் பரப்பளவில் அதிக பயிர் எண்ணிக்கை பராமரிப்பதன் மூலம் கூடுதல் மகசூலும், அதிக வருவாயும் எடுக்கமுடியும்.

பருத்தியில், செடிக்கு செடி 2 அடி இடைவெளியும், அடுத்த வரிசை 4 அடியும், அடுத்த வரிசை 2 அடியும் விட்டு நடவு செய்ய வேண்டும். ஊடுபயிராக உளுந்து சாகுபடி செய்து, அதிக பயிர் எண்ணிக்கையை பராமரித்து கூடுதல் வருவாய் பெறலாம்.

மக்காசோள சாகுபடியில் வரிசைக்கு வரிசை 2 அடியும், செடிக்கு செடி ஒன்றரை அடி விட்டு ஒரு குழியில் இரண்டு விதை நடவு செய்தால், அதிக பயிர் எண்ணிக்கையை பராமரிக்கலாம்.

இதன்மூலம், இரட்டிப்பு வருவாய் பெறலாம். எனவே, பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி மற்றும் மக்காசோளம் சாகுபடி செய்யும் விவசாயிகள் இந்த புதிய தொழில் நுட்பத்தை கடைத்து அதிக மகசூல் பெறலாம்.

**17th Sep 20012** திருமூர்த்தி அணை : பாசனத்துக்கு நாளை முதல் தண்ணீர் திறப்பு

சென்னை, செப்., 14 : திருப்பூர் மாவட்டம் திருமூர்த்தி அணையில் இருந்து பாசனத்துக்காக நாளை முதல் இடைவெளி விட்டு தண்ணீர் திறந்து விட தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.
இது குறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று, திருமூர்த்தி அணையில் இருந்து, பரம்பிக்குளம் பிரதான கால்வய், உடுமலைப்பேட்ட் கால்வாய், உயர்மட்ட கால்வாய், மற்றும் தளிவாய்க்கால் பாசன அமைப்பின் கீழ் உள்ள விவசாய நிலங்களின் பாசனத்துக்காக நாளை முதல் தேவைக்கேற்ப இடைவெளி விட்டு தண்ணீர் திறந்துவிட தமிழக முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.
இதனால் கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள 96,987 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**17th Sep 20012** விலை குறைவு : ஈரோடு மஞ்சள் சந்தையில் இன்றைய ஏலம் ரத்து

ஈரோடு, செப்., 13 : ஈரோடு சுண்ணாம்பு ஓடை அருகே உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூட்டத்தில் வாரந்தோறும் திங்கள் முதல் வெள்ளி வரை மஞ்சள் ஏலம் நடக்கும். ஆசியாவிலேயே மிகப் பெரிய மஞ்சள் சந்தையாக விளங்குவது ஈரோடு மஞ்சள் சந்தையாகும்.
இன்று மஞ்சள் சந்தையில் சுமார் 150 மாதிரிகளை விவசாயிகள் ஏலத்துக்கு வைத்திருந்தனர். ஆனால், நேற்றை விட 1000 ரூபாய் குறைவாக மஞ்சள் ஏலம் எடுக்கப்பட்டது. இதனால் விரக்தி அடைந்த விவசாயிகள் மஞ்சள் ஏலத்தை முழுமையாக ரத்து செய்துவிட்டனர்.

**17th Sep 20012** டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இருந்து நீர் திறப்பு

சேலம், செப்., 17 : டெல்டா பாசனத்துக்காக மேட்டூர் அணையில் இன்று இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

இன்று பகல் 12.20 மணிக்கு நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழக பொதுப்பணித் துறை அமைச்சர் கேவி. ராமலிங்கம் மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் வெளியேறும் வகையில் மதகுகளை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் தொழிற்துறை அமைச்சர் தங்கமணி, நெடுஞ்சாலை மற்றும் சிவில் துறைமுகங்கள் துறை அமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, சேலம் எம்பி செம்மலை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இன்று முதல் மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்காக விநாடிக்கு 4,000 கன அடி திறந்துவிடப்படுகிறது.

சுமார் மூன்று மாதங்களுக்குப் பிறகு மேட்டூர் அணை இன்று திறக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணையில் இருந்து நீர் திறக்கப்பட்டுள்ளதால், மேட்டூர் நீர்மின் நிலையத்தில் இருந்து 400 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என்பது கூடுதல் தகவலாகும்.

**17th Sep 20012** | **தோட்டக்கலைத் துறைக்கு ரூ.30 லட்சத்தில் புதிய அலுவலகக் கட்டடம்**

தருமபுரி, செப்.16: தருமபுரி மாவட்ட தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் அலுவலகத்துக்கு ரூ.30 லட்சத்தில் புதிய கட்டடம் கட்டப்படவுள்ளது.

தமிழகத்தில் தோட்டக் கலையின் முக்கியத்துவத்தை உணர்ந்து 1978-ம் ஆண்டு தோட்டக்கலைத் துறை உருவாக்கப்பட்டது. இதன் இயக்குநரகம் தொடக்கத்தில் தருமபுரியில்தான் இயங்கி வந்தது. பின்னர், நிர்வாகக் காரணங்களுககாக சென்னைக்கு மாற்றப்பட்டது.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள வேளாண்மைத் துறை அலுவலகக் கட்டத்திலேயே தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் அலுவலகம் இயங்கி வருகிறது. இதற்குப் புதிய கட்டடம் கட்ட மாவட்ட நிர்வாகத்திடம் அனுமதி கோரியதில், 91 சென்ட் நிலத்தை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலேயே அரசு ஒதுக்கீடு செய்தது.

இந்த இடத்தில் ரூ.30 லட்சத்தில் புதிய கட்டடம் கட்ட அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதன்படி, கட்டுமானப் பணிகளுக்கான அடிக்கல்லை ஆட்சியர் ஆர். லில்லி வியாழக்கிழமை நட்டு வைத்தார்.

நிகழ்ச்சியில் தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் க. கலைச்செல்வி, பொதுப் பணித்துறை செயற்பொறியாளர் ராஜாமணி மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நாமக்கல், செப்.16: கோழித் தீவன மூலப் பொருள்களின் விலை கடுமையான உயர்ந்துள்ளதால், நாமக்கல்லில் சிறு முதலீட்டில் இயங்கும் கோழிப்பண்ணைகள் மூடப்பட்டு வருகின்றன. பெரிய பண்ணைகளில் முட்டை உற்பத்திக்காக கோழிகள் விடுவதும் குறைந்து வருகின்றன.

தமிழகத்தில் சேலம், நாமக்கல், கரூர், ஈரோடு மாவட்டங்களை உள்ளடக்கிய நாமக்கல் மண்டலத்தில் சுமார் 800 கோழிப்பண்ணைகள் உள்ளன. அவற்றின் மூலம் நாளொன்றுக்கு 3 கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகம் மட்டுமன்றி பிற மாநிலங் களுக்கும், வெளி நாடுகளுக்கும் விற்பனைக்காக அனுப்பப்படுகின்றன.

முட்டை உற்பத்திக் காக 16 முதல் 18 வாரங்கள் வயதுடைய கோழிகள் பண்ணைகளில் விடப்படுகின்றன. அவை 52 முதல் 70 வாரங்கள் வரை என சராசரியாக 320 முட்டைகள் இடுகின்றன. முட்டை உற்பத்தியைப் பெருக்க மக்காச்சோளம், சோயா, சூரியகாந்தி புண்ணாக்கு, சின்ன சோளம், கம்பு, அரிசிக் குருணை உள்ளிட்ட தீவன மூலப்பொருள்கள் கலந்த தீவனங்கள் கோழிகளுக்கு அளிக்கப்படுகின்றன. இந்தத் தீவன மூலப்பொருள்களின் விலை கடந்த ஓராண்டில் 40 முதல் 60 சதம் வரை உயர்த்தப்பட்டுள்ளது.

அதன்படி, கடந்த ஆண்டு, செப்டம்பர் மாதம் ரூ. 20,700-க்கு விற்கப்பட்ட ஒரு டன் சோயா, நிகழாண்டில் ரூ. 45,000 ஆக உயர்ந்துள்ளது.

அதேபோல, சூரியகாந்தி புண்ணாக்கு ரூ.15,300-லிருந்து ரூ. 27,000 ஆகவும், மக்காச்சோளம் ரூ.13,500-லிருந்து ரூ.16,000 ஆகவும், சின்ன சோளம் ரூ.12,000-லிருந்து ரூ.15,000ஆகவும், அரிசிக் குருணை ரூ.10,000-லிருந்து ரூ.14,500 ஆகவும், கம்பு ரூ.12,000-லிருந்து ரூ.15,000 ஆகவும் உயர்ந்துள்ளன. தீவன மூலப்பொருள்கள் பெருமளவில் ஏற்றுமதியாகின்றன. சர்வதேச சந்தையில் தீவன மூலப்பொருள்களுக்கு அதிகப்படியான விலை கிடைப்பதால், உள் நாட்டிலும் அவற்றின் விலை பெருமளவில் உயர்த்தப்பட்டுள்ளன. அத்துடன், மக்காச்சோளம், சோயா, சூரியகாந்தி புண்ணாக்கு உள்ளிட்டவை பெருமளவில் கர்நாடகம், ஆந்திரம், குஜராத், மகாராஷ்டிரம் உள்ளிட்ட வெளி மாநிலங்களிலிருந்தே தருவிக்க வேண்டியுள்ளது. இந்த நிலையில், நிகழாண்டில் மழைப் பொழிவு சற்றுக் குறைந்து விளைச்சல் பாதிக்கப்பட்டிருப்பதும் விலையேற்றத்துக்கு முக்கியக் காரணம் என்கிறார் நாமக்கல் மாவட்ட தீவன மூலப்பொருள்கள் விற்பனையாளர்கள் சங்கத் தலைவர் எம்.எஸ்.ஆர்.முருகேசன்.

மிகக் கடுமையாக உயர்ந்துள்ள இந்தத் தீவன மூலப்பொருள்களின் விலை காரணமாக ஒரு முட்டை உற்பத்திச் செலவு ரூ.3.15 முதல் ரூ.3.25 வரை உயர்ந்துள்ளது. அதேசமயம், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு (என்இசிசி) நிர்ணயித்துள்ள முட்டை கொள்முதல் விலை ரூ.3.65-ல் வியாபாரிகளுக்கான இடைத்தரகு தொகை 25 காசுகளை கழித்து கிடைக்கும் ரூ.3.40

விலையால் பண்ணையாளர்களுக்கு எந்தவிதப் பலனும் இல்லை என்று நாமக்கல் முட்டை உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதையடுத்து, கோழிப்பண்ணைகளை நடத்த முடியாமல் மாவட்டத்தில் பல இடங்களிலும் சிறு முதலீட்டில் தொழில்புரியும் பண்ணையாளர்கள் முட்டை உற்பத்தியை முழுமையாக நிறுத்தியுள்ளனர். பெரிய பண்ணைகளிலும் முட்டைக்காக கோழிகள் விடுவதையும் குறைத்துக் கொண்டுள்ளனர்.

புரட்டாசி மாதம் தொடங்கினால் முட்டை நுகர்வு குறைந்து பண்ணைக் கொள்முதல் விலையிலும் சரிவு ஏற்படக்கூடும். அப்போது, கோழிப்பண்ணையாளர்களுக்கு மேலும் பாதிப்புகளே ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

தீவன மூலப்பொருள்களின் இந்த விலையேற்றத்தை அடுத்து இந்திய உணவுக் கழகத்தின் கிடங்குகளில் தேக்கி வைக்கப்பட்டுள்ள மனித உபயோகத்துக்கு பயன்படுத்த முடியாத கழிவுக் கோதுமையை கோழிப்பண்ணைகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று மத்திய அரசை தமிழ்நாடு கோழிப்பண்ணையாளர்கள் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

**17th Sep 20012** | **பருத்தி, மக்காச்சோளம் கூடுதல் மகசூல் பெற ஆலோசனை**

பெரம்பலூர், செப். 16: பருத்தி மற்றும் மக்காசோள சாகுபடியில் கூடுதல் மகசூல் பெற புதிய தொழில் நுட்பங்களை விவசாயிகள் பயன்படுத்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்த வேளாண் இணை இயக்குநர் பி. சங்கரலிங்கம் செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில், 45,000 ஹெக்டரில் மக்காசோளமும், 26,000 ஹெக்டரில் பருத்தியும் சாகுபடி செய்து வருகின்றனர். ஆனால், மாநில சராசரி விளைச்சலை விட குறைவான மகசூல் பெறுகின்றனர். எனவே, ஒரு ஏக்கர் பரப்பளவில் அதிக பயிர் எண்ணிக்கை பராமரிப்பதன் மூலம் கூடுதல் மகசூலும், அதிக வருவாயும் எடுக்கமுடியும்.

பருத்தியில், செடிக்கு செடி 2 அடி இடைவெளியும், அடுத்த வரிசை 4 அடியும், அடுத்த வரிசை 2 அடியும் விட்டு நடவு செய்ய வேண்டும். ஊடுபயிராக உளுந்து சாகுபடி செய்து, அதிக பயிர் எண்ணிக்கையை பராமரித்து கூடுதல் வருவாய் பெறலாம்.

மக்காசோள சாகுபடியில் வரிசைக்கு வரிசை 2 அடியும், செடிக்கு செடி ஒன்றரை அடி விட்டு ஒரு குழியில் இரண்டு விதை நடவு செய்தால், அதிக பயிர் எண்ணிக்கையை பராமரிக்கலாம்.

இதன்மூலம், இரட்டிப்பு வருவாய் பெறலாம். எனவே, பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தி மற்றும் மக்காசோளம் சாகுபடி செய்யும் விவசாயிகள் இந்த புதிய தொழில் நுட்பத்தை கடைத்து அதிக மகசூல் பெறலாம்.

**17th Sep 20012** **வட்டியில்லா பயிர் கடன் சிறப்பு முகாம்கள்: 2,456 பேர் விண்ணப்பம்**

பெரம்பலூர், செப். 16: பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள 4 ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெற்ற, விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர் கடன் சிறப்பு முகாம்களில் 2,456 விண்ணப்பங்கள் பெறப்பட்டன என்றார் மாவட்ட ஆட்சிர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வட்டியில்லா பயிர் கடன் முகாமை தொடக்கி வைத்து அவர் கூறியது:

பெரம்பலூர் ஒன்றியத்தை சேர்ந்த விவசாயிகள், சம்பந்தப்பட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க அலுவலர்களை அணுகி பருத்தி, மக்காச்சோளம், நெல், மரவள்ளிக் கிழங்கு, மஞ்சள், கடலை, கரும்பு ஆகிய பயிர்கள் சாகுபடி செய்வதற்கு 236 விண்ணப்பங்கள் அளித்தனர். இவை கணினி மூலம் பதிவு செய்யப்பட்டு, ஒப்புகைச் சான்று அளிக்கப்பட்டது.

முகாமில் வருவாய்த் துறையினர் மூலம் பயிர்கடன் பெறத்தேவையான சிட்டா, சொத்து பொறுப்பு பட்டியல், கிராம கணக்கு நகல் போன்ற ஆவணங்கள் அங்கேயே வழங்கப்பட்டன. வேப்பந்தட்டை முகாமில் 587 மனுக்களும், வேப்பூர் முகாமில் 954 மனுக்களும், ஆலத்தூர் முகாமில் 679 மனுக்களும், பெரம்பலூரில் நடைபெற்ற முகாமில் 236 மனுக்களும் என 2,456 மனுக்கள் பெறப்பட்டன. விவசாயிகள் அளித்த இந்த விண்ணப்பங்களில் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்கள் அடிப்படையில், பரிசீலனை செய்யப்பட்டு பயிர்கடன் வழங்கப்படும்.

பயிர்கடன் குறித்த சந்கேங்களுக்கு வேப்பந்தட்டை : 88838 10445, வேப்பூர் :94438 88674, ஆலத்தூர்: 97512 83536, பெரம்பலூர்: 94860 60816 எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

முகாமில், கோட்டாட்சியர் இரா. ரேவதி, கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் எம். உமாமகேஸ்வரி, துணைப்பதிவாளர் ஆத்மநாதன், மத்திய கூட்டுறவு வங்கி கள மேலாளர் எஸ். துரைஅரசு, வட்டாச்சியர் பவனந்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**17th Sep 20012** **விவசாயக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வலியுறுத்தல்**

திருச்சி, செப்.16: கடுமையான வறட்சி, தண்ணீர் பற்றாக்குறை,உரவிலையேற்றம் காரணமாக, பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளின் நலன் கருதி, அவர்களின் அனைத்துக் கடன்களையும் தள்ளுபடி செய்யவேண்டும் என பாரதீய கிசான் சங்கம் மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தியுள்ளது.

திருச்சியில் சனிக்கிழமை நடைபெற்ற இந்த சங்கத்தின் நிர்வாகிகள் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது, கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட இதர தீர்மானங்கள்: செப்டம்பர் 23 முதல் அக்டோபர் 12 ஆம் தேதி வரை 20 நாள்களில் திருச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து ஒன்றியங்களிலும் ரதயாத்திரை மூலமாக தேசிய விவசாயிகள் விழிப்புணர்வு, விவசாயிகள்

நலவாழ்வு விழாக்கள், கோமாதா, பாரதமாதா பூஜைகள், பாலராமர் ஜெயந்தி விழா ஆகியவற்றை நடத்துவது. சில்லறை வர்த்தகத்தில் நேரடி அன்னிய முதலீட்டுக்கான அனுமதியை கண்டித்து, மிகப்பெரிய அளவில் போராட்டத்தை நடத்துவது என முடிவு செய்யப்பட்டது, விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.10,000 மானியம் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தக் கூட்டத்துக்கு சங்கத்தின் மாவட்டத் தலைவர் அன்பில் அன்பழகன் தலைமை வகித்தார். மாவட்டச் செயலர்கள் திருப்பைஞ்ஞீலி கணேசன், சுரேஷ் முன்னிலை வகித்தனர். அகில பாரதீய கிசான் சங்கத்தின் பொறுப்பளர் கணேசன், மாநிலத் துணைத் தலைவர் பி. அய்யாக்கண்ணு, மாநில விவசாய பிரிவுத் துணைத் தலைவர் எம்.என். வைத்தியநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கதிர்வேலு, கண்ணன், முருகன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

17.09.2012 P.M

18.09.2012 A.M

18th Sep 20012

## மேட்டூர் அணையில் இருந்து சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறப்பு



சேலம் : மேட்டூர் அணையில் இருந்து சம்பா சாகுபடிக்கு நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் 4.7 லட்சம் ஹெக்டேர் பாசன வசதி பெறும் என பொதுப்பணித் துறை அமைச்சர் ராமலிங்கம் தெரிவித்தார். சம்பா நெல் சாகுபடிக்காக, மேட்டூர் அணையிலிருந்து நேற்று மதியம் 12.15 மணியளவில் தண்ணீர் திறக்கப்பட்டது. அமைச்சர் ராமலிங்கம் அணையிலிருந்து தண்ணீரை திறந்து விட்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

டெல்டா விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, 17ம் தேதி முதல் வரும் அடுத்த ஆண்டு ஜனவரி 28ம் தேதி வரை பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்படும் என்று முதல்வர் உத்தரவிட்டிருந்தார். அதன்படி, டெல்டா மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில், மேட்டூர் அணையிலிருந்து

தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. திங்கட்கிழமை காலை 8 மணி நிலவரப்படி, மேட்டூர் அணையின் நீர்மட்டம் 84.15 அடியாகவும், நீர் இருப்பு 46.21 டி.எம்.சி. ஆகவும் இருந்தது. அணைக்கு வினாடிக்கு 12 ஆயிரத்து 418 கனஅடி நீர் வந்து கொண்டிருக்கிறது. சம்பா சாகுபடிக்காக, அணையிலிருந்து இப்போது தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

துவக்கத்தில் 4 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இது படிப்படியாக வினாடிக்கு 16 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்படும். மேட்டூர் அணையில் திறக்கப்பட்ட தண்ணீர் மூலம் கரூர், திருச்சி மாவட்டத்தின் பாசனப் பகுதி, டெல்டா மாவட்டங்களான தஞ்சாவூர், திருவாரூர், நாகை, புதுக்கோட்டை மாவட்டத்தின் ஒரு பகுதி, வெண்ணாறு பாசனப் பகுதி, கல்லணை கால்வாய் பாசனப் பகுதி எனசேர்த்து, மொத்தம் 4.7 லட்சம் ஹெக்டேர் சம்பா பயிர் சாகுபடி செய்ய, இந்த ஆண்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணை தண்ணீர் வரும் 21ம் தேதி கல்லணையை சென்றடையும் என்றார்.

தமிழகத்திற்கு கூடுதலாக தண்ணீர் கேட்போம்

உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, கர்நாடகாவில் இருந்து காவிரியில் தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில், கடந்த 2 நாட்களுக்கு முன்பு பிலிகுண்டுலுவில் வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடியை நீர்வரத்து தொட்டுள்ளது. இப்போது 12 ஆயிரம் கனஅடியை தொட்டுள்ளது. டெல்லியில் வரும் 19ம் தேதி, காவிரி நதி நீர் ஆணைய கூட்டம் நடக்கிறது.

இதில், தமிழகத்திற்கு மேலும் கூடுதலாக தண்ணீர் திறந்துவிட, தமிழக அரசின் சார்பில் கோரிக்கை வைக்கப்படும். போதுமான விதை மற்றும் உரமும் கையிருப்பில் உள்ளது. நடப்பாண்டில் குறிப்பிட்ட நாளில் அணை திறக்கப்படாததால், விவசாயிகளுக்கு இழப்பீடாக ஸி100 கோடி வழங்கப்பட்டுள்ளது.
இவ்வாறு அமைச்சர் ராமலிங்கம் கூறினார்.

17th sep 2012 P.M

| 17th Sep 20012 | குவிண்டால் நெல்லுக்கு ரூ 2,000 விவசாயிகள் வலியுறுத்தல் |
|---|---|

பேராவூரணி, : நெல் குவிண்டாலுக்கு ரூ.2,000, கரும்பு டன்னுக்கு ரூ.2,500 விலை நிர்ணயம் செய்ய வேண்டுமென விவசாயிகள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

பேராவூரணியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க 7வது வட்ட மாநாடு நடந்தது. வட்டக்குழு உறுப்பினர் மாணிக்கம் தலைமை வகித்தார். நடேசன் வரவேற்றார்.
நெல் குவிண்டாலுக்கு ரூ.2,000மும், கரும்பு டன்னுக்கு ரூ.2,500மும் நிர்ணயம் செய்ய வேண்டும். தேங்காய் கொப்பரை கிலோ ஒன்றுக்கு ரூ.75, உரித்த முழு தேங்காய் கிலோ ரூ.25 விலை நிர்ணயம் செய்ய வேண்டும். பட்டுக்கோட்டை- தஞ்சாவூர்- அரியலூர் ரயில் பாதை திட்டத்தை உடனே நிறைவேற்ற வேண்டும். கூட்டுறவு சங்க உறுப்பினர் பதிவை வெளிப்படையாக அறிவித்து அடையாள அட்டை வழங்கி ஆளும்கட்சி தலையீடு இன்றி முறையாக தேர்தல் நடத்த வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
இதைதொடர்ந்து புதிய நிர்வாகிகள் தேர்வு நடந்தது. விவசாயிகள் சங்க வட்ட செயலாளராக ஆவான், தலைவராக கருப்பையா, பொருளாளராக மாணிக்கம் தேர்வு செய்யப்பட்டனர்.
மாநாட்டில் மாவட்ட விவசாய சங்க செயலாளர் சாமிநடராஜன், விவசாய தொழிலாளர் சங்க ஒன்றிய செயலாளர் வேலுசாமி, ஜனநாயக மாதர் சங்க தலைவர் இந்துமதி, விவசாய சங்க மாவட்ட பொருளாளர் கோவிந்தசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

| 17th Sep 20012 | விதை நலம் பேணும் பயிற்சி |
|---|---|

பழநி, :  அட்மா திட்டத்தின்கீழ் விதை விற்பனையாளர்களுக்கு நடப்பாண்டிற்கான விதை நலம் பேணும் பயிற்சி பழநியில் நடந்தது. கரூர் விதை ஆய்வு துணை இயக்குநர் ரங்கராஜன் தலைமை வகித்தார். பழநி வேளாண்மை உதவி இயக்குநர் வெள்ளைச்சாமி முன்னிலை வகித்தார்.
தொழில்நுட்பம் குறித்து விதைச் சான்று உதவி இயக்குநர் பாலசுப்பிரமணியன் பேசினார். விதை கொள்முதல் மற்றும் ஆய்வுப்பணிகள் குறித்து விதை ஆய்வாளர் காசிராஜன் பேசினார்.  விதைகள் சட்ட அமலாக்கம் குறித்து திண்டுக்கல் விதை ஆய்வாளர் உமா பேசினார்.
பதிவேடுகள் மற்றும் சேமிப்பு முறை குறித்து வத்தலக்குண்டு விதை ஆய்வாளர் சேட் முகமது பேசினார். அரசு மற்றும் தனியார் விதை விற்பனையாளர்கள் 100க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.
ஊராட்சி தலைவர்களுக்கு  பட்டறிவு பயிற்சி முகாம்
பழநி, : பழநி ஒன்றியத்தில் 20 ஊராட்சிகள் உள்ளன. இவ்ஊராட்சிகளின் தலைவர்கள், செயலர்கள், ஊராட்சி உறுப்பினர்கள் ஆகியோருக்கு பிற்படுத்தப்பட்ட மானிய நிதி திட்டத்தி கீழ் திருப்பூர் மற்றும் கோவை மாவட்டத்தில் பட்டறிவு பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.
அம்மாவட்டங்களில் உள்ள ஊராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுள்ள தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டம், பசுமை வீடுகள் திட்டம் உள்ளிட்ட மத்திய, மாநில அரசு திட்டங்கள், சுய

உதவிக்குழுக்களின் செயல்பாடுகள், ஊராட்சி நிர்வாகம் உள்ளிட்டவற்றை ஊராட்சித்தலைவர்கள் பார்வையிட்டனர்.
வட்டார வளர்ச்சி அலுவலர் முருகேசன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கிரி, நாகராஜன் கலந்துகொண்டனர்.

17th Sep 20012

## கால்நடை கணக்கெடுப்பு பணிக்கு முழு ஒத்துழைப்பு விவசாயிகளுக்கு அறிவுறுத்தல்

செந்துறை, : செந்துறையில் நடந்த கூட்டத்தில் கால்நடை கணக்கெடுப்பு பணிக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்பட்டது.
அரியலூர் மாவட்டம் செந்துறையில் அஸ்காட் திட்டத்தின்கீழ் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கூட்டம் செந்துறை கால்நடை மருந்தகத்தில் நடந்தது. செந்துறை ஒன்றிய கால்நடை உதவி மருத்துவர் குமார் அஸ்காட் திட்டம் மூலம் கால் நடைகளுக்கு வழங்கப்படும் தடுப்பூசிகள் மற்றும் தடுப்பூசி போடுவதன் அவசியம் பற்றி விளக்கினார். பொன்பரப்பி கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் ராமதுரை, இரும்புலிக்குறிச்சி கால்நடை உதவி மருத்துவர் டாக்டர் இளங்கோவன் பேசினர்.
அஸ்காட் திட்டத்தின் மூலம் இன்று முதல் கோமாரி நோய் தடுப்பூசிகள் அனைத்து கிராமங்களிலும் போட உள்ளதால் கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கால்நடைகளுக்கும் தடுப்பூசிகளை போட்டுக் கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டது. மேலும் தற்போது நடைபெற்று வரும் 19வது கால்நடை கணக்கெடுப்பு பணியில் கணக்கெடுப்பாளர்கள் கோரும் அனைத்து விவரங்களையும் வழங்கி கணக்கெடுப்பு பணி சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்குமாறு அனைத்து விவசாயிகளுக்கும் தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தில் குழுமூர் கால்நடை உதவி மருத்துவர் தென்றல் மற்றும் ஆர்.எஸ்.மாத்தூர் கால்நடை உதவி மருத்துவர் தர்மராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். குழுமூர் கால்நடை உதவி மருத்துவர் தென்றல் நன்றி கூறினார்.

17th Sep 20012

## விதை உற்பத்தியாளர்களுக்கு தாராபுரத்தில் பயிற்சி

தாராபுரம், : தாராபுரத்தில் ஆட்மா திட்டத்தின் மூலம் தனியார் விதை உற்பத்தியாளர்கள் மற்றும் சாகுபடியாளர்களுக்கு விதை சான்று பயிற்சி முகாம் நடைபெற்றது. விதை சான்று உதவி இயக்குநர் மகாதேவன் தலைமை பேசியதாவது: சான்று பெற்ற விதைகள் அதிக முளைப்புத்திறன், புறத்தூய்மை,இனத்தூய்மை, அளவான ஈரப்பதம் கொண்டது. இந்த விதைகளை விதைப்புக்கு பயன்படுத்துவதால் நல்லமுளைப்புத்திறன் தேவையான பயிர் எண்ணிக்கை, சீரான பயிர் வளர்ச்சி, ஒரே நேரத்தில் பூ பூத்து முதிரும்,கலப்படமில்லாத அதிக மகசூல், விளைபொருளுக்கு நியாயமான விலை கிடைக்கும். சான்று விதை உற்பத்தி அதிகரிக்கும் போது விவசாயிகளுக்கு தரமான விதைகள் எளிதாக கிடைக்க வாய்ப்புகள் அதிகம்.

இவ்வாறு பேசினார். பயிற்சியில் சாகுபடியாளர்களுக்கு சான்று விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள், வல்லுநர் விதை, ஆதாரநிலை, சான்றுநிலை விதைகள் எவ்வாறு உற்பத்தி செய்வது உள்ளிட்ட பல பயிற்சிகள்அளிக்கப்பட்டன. அலுவலர்கள் மாரிமுத்து, ஜீவதயாளன், பொம்மராஜ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

17th Sep 20012

## குறுவை சாகுபடி பாதிப்பு விவசாயிகளுக்கு?ஏக்கருக்கு ரூ.10?ஆயிரம்?வழங்க?வேண்டும் கம்பம் எம்எல்ஏ கோரிக்கை

கூடலூர், : குறுவை சாகுபடி செய்ய முடியாமல் பாதிக்கப்பட்ட 5 மாவட்ட விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம்  நிவாரணம் வழங்க வேண்டும் என கம்பம் எம்எல்ஏ ராமகிருஷ்ணன் எம்எல்ஏ கோரிக்கை விடுத்துள்ளார்.

பெரியாறு அணையிலிருந்து விவசாயத்திற்கு உரிய தண்ணீர் கிடைக்காததால் தேனி, மதுரை, திண்டுக்கல் உட்பட மாவட்டங்களிலும் குறுவை விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் நிலை குறித்து கம்பம் ராமகிருஷ்ணன் எம்எல்ஏ, மாவட்ட கலெக்டர் பழனிச்சாமிக்கு அனுப்பியுள்ள மனுவில் கூறியிருப்பதாவது:

முல்லைப் பெரியாறு அணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு தேவையான தண்ணீர், உரிய காலத்தில் கிடைக்காததால் தேனி, மதுரை, திண்டுக்கல், சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களிலும் விவசாயம் பாதிக்கப்பட்டு நெல் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் விவசாயிகளும், தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் சம்பா சாகுபடி செய்யவுள்ள

விவசாயிகளுக்கு, முன்பு பெற்றிருந்த விவசாயக் கடனை ரத்து செய்ய வேண்டும். சாகுபடி செய்ய வசதியாக வட்டியில்லா கடன் வழங்க வேண்டும்.
பூச்சி மருந்து, விதை நெல், களைக்கொல்லி மருந்து, உரம் உட்பட அனைத்து செலவு தொகையையும் விவசாயிகளுக்கு மானியமாக வழங்க வேண்டும். காவிரி டெல்டா பகுதி விவசாயிகளுக்கு நிபந்தனையின்றி மும்முறை மின்சார இணைப்பு வழங்கியதுபோல், பாதிக்கப்பட்டுள்ள 5 மாவட்ட விவசாயிகளுக்கும் மும்முறை மின்சாரம் வழங்க வேண்டும். குறுவை சாகுபடி செய்ய முடியாமல் பாதிக்கப்பட்டுள்ள 5 மாவட்ட விவசாயிகளுக்கு, ஏக்கருக்கு ரூ. 10 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும்.
கால்நடை வளர்ப்பவர்களுக்கு மானிய விலையில் தீவனம் வழங்க வேண்டும்’ இவ்வாறு அவர் மனுவில் தெரிவித்துள்ளார்.

17th Sep 20012

## ஆரல்வாய்மொழி அருகே விதை விதைக்கும் இயந்திரம் அறிமுகவிழா

ஆரல்வாய் மொழி,: குமரி மாவட்ட வேளாண்மை பொறியியல் துறை சார்பில், விதை விதைக்கும் இயந்திரம் அறிமுக விழா ஆரல்வாய்மொழி அருகே கண்ணன்புதூர் பட்டர்குளம் காலனியில் நடந்தது. வேளாண்மை பொறியியல் துறை செயற்பொறியாளர் ஆனந்தராஜா தலைமை வகித்தார். உதவி செயற்பொறியாளர்கள் ஜான் கிறிஸ்டோபர், ஆனந்த பாபு, லதா ஆகியோர் கலந்து கொண்டனர்.
விழாவில் பட்டர்குளம் காலனியை சேர்ந்த தமிழ்செல்வியின் விவசாய நிலத்தில் அதிகாரிகள், விதை விதைக்கும் இயந்திரத்தை வைத்து, விவசாயிகளுக்கு செயல் விளக்க பயிற்சி அளித்தனர். இதில் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். இது குறித்து செயற்பொறியாளர் ஆனந்தராஜா கூறியதாவது:
இந்த விதை விதைக்கும் இயந்திரம் மூலம் வேர்கடலை, மக்காச்சோளம், பாசிப்பயிர் ஆகிய பயிர்களை குறைந்த நேரத்தில் விதைத்து விடலாம். ஒரு ஏக்கரில் விதை விதைக்க இரண்டரை மணி நே ரம் மட்டுமே செலவாகும். இதற்காக ஒரு மணி நேரத்துக்கு ரூ.300 வாடகையாக வசூல் செய்யப்படுகி றது. விதைகளை விதைக்க கூடிய இடத்தில் குறைந்த அளவு ஈரப்பதம் இருந்தால் போதுமானது. ஏற்க னவே உழுது இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றார்.

17th Sep 20012

## வெள்ளமோடியில் இயந்திரம் மூலம் தென்னை மரம் ஏறும்

## பயிற்சி முகாம்

மணவாளக்குறிச்சி, :  வேளாண்மைத்தொழில் நுட்ப மேலாண்மை முகமை மற்றும் மாவட்ட தென்னைத்தொழில் மேம்பாட்டுக்குழு சார்பில் இயந்திரம் மூலம் தென்னைமரம் ஏறும் விழிப்புணர்வு பயிற்சி முகாம் வெள்ளமோடி பூமி பாதுகாப்புச் சங்க அலுவலகத்தில் நடந்தது. பத்மநாபபுரம் ஆர்.டி.ஓ.மோகனசந்திரன் தலைமை வகித்தார். வேளாண்துறை இணை இயக்குனர் நாகமணி பிள்ளை முன்னிலை வகித்தார்.

நாகர்கோவில் உழவர்பயிற்சி நிலைய வேளாண்துணை இயக்குனர் இளங்கோ, தென்னை தொழில் மேம்பாட்டுக்குழு அமைப்பாளர் கருணாகரன் ஆகியோர் தென்னை விவசாயிகளுக்கு விழிப்புணர்வு பயிற்சி அளித்தனர்.

இயந்திரம் மூலம் முறையாக தென்னைமரம் ஏறியபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. வெள்ளமோடி பூமி பாதுகாப்பு சங்க தலைவர் கிருஷ்ணசாமி, செயலாளர் பத்மதாஸ் மற்றும் உறுப்பினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

17th Sep 20012

**நத்தம் பகுதியில்
புளி பு தன்மை மிகுந்த கோடை மாங்காய் சீசன் தொடக்கம்
ஒரு கிலோ ரூ.35–க்கு விற்பனை**

நத்தம் பகுதியில் புளி பு தன்மை மிகுந்த கோடை மாங்காய் சீசன் தொடங்கி உள்ளது. அவை ஒரு கிலோ ரூ.35க்கு விற்பனை செய்ய படுகிறது.

கோடை மாங்காய் சீசன்

தி டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் பரளி, வத்திபட்டி, லிங்கவாடி, அரவங்குறிச்சி, மணக்காட்டூர், சமுத்திரா பட்டி, குட்டு பட்டி, துவராபதி, சேர்வீடு போன்ற பகுதிகளில் ஏராளமான மாமரங்கள் உள்ளன. இவற்றில் சீசனையொட்டி கல்லாமை, காஜா, பாலாமணி, ருமேனியா, மல்லிகா, இமாம்பசந்த் போன்ற பல ரகங்கள் அறுவடை செய்ய பட்டு, கடந்த ஜூன் மாதம் வரை உச்ச கட்ட விற்பனை நடந்தது. அதன்பிறகு சீசன் ஓய்ந்தது.

இந்நிலையில் இதே பகுதியில் இதே ரகங்களை சேர்ந்த மாங்காய்கள் தற்போது கோடை காய்களாக விளைச்சல் பெற்று அறுவடை செய்ய பட்டு, நத்தம் சந்தைக்கு விற்பனைக்கு வருகிறது. இந்த மாங்காய் ஒரு கிலோ ரூ. 35 வீதம் விலை போகிறது.

இது குறித்து நத்தம் வட்டார மா,தென்னை, புளி மற்றும் பழ ப ணை விவசாயிகள் அமை புத் தலைவர் வேம்பார்பட்டி க ணு முகமது கூறியதாவது:–

புளி பு தன்மை

வருடந்தோறும் செ டம்பர் மாதத்தில் கோடை மாங்காய் விளைச்சல் பெறுவது வழக்கம். இந்த மாங்காய்கள் மதுரை, தி டுக்கல், திருச்சி, தஞ்சாவூர் போன்ற பகுதிகளுக்கு ஏஜென்ட் மூலமாக லாரி,வேன்களில் மூடை களாக கட்டி அனு பி வைக்க படுகிறது.

இந்த மாங்காய் சாம்பார், ஊறுகாய் மற்றும் வத்தல் போன்ற உபயோகத்திற்கு பயன்படுத்த படுகிறது. ஆனால், இந்த மாங்காய்களை பழுக்க வைத்து பழமாக பயன்படுத்த முடியாது. ஏனென்றால் இந்த மாதத்தில் விளைச்சல் பெறும் மாங்காய்கள் முழுக்க முழுக்க புளி புத் தன்மை நிறைந்தது.

இவ்வாறு அவர் கூறினார்.